கொண்டிருக்க இயலாது என்பதையும் மெத்த வருத்தத்தோடு தெரிவிக்கின்றேன். போராட்டத்தில் இதுபோன்று இறங்குகின்றவர்கள் அதனால் உண்டாகக் கூடிய இழப்புகளையும் சந்திக்கத் தயாராக இருக்க வேண்டும். எனவே வேலை நிறுத்தம் முடிந்த பிறகு, வேலை நிறுத்தக் காலத்தை பணிக் காலமாக மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பினாலும் அது ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்று நான் முன் கூட்டியே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். அத்துடன் அரசு விதிகளுக்கு உட்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுவது தவிர்க்க முடியாததாக ஆகி விடும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். ''The doors are still open ''.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப்பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

11-30 மணி

5. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

திரு. சா. சிவசுப்பிரமணியன் : தலைவரவர்களே, 1989-90 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தி நான்கு மற்றும் முப்பத்தைந்தாவது (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

6. வரவு-செலவுத் திட்டம், 1990-91-பொது விவாதம்—தொடர்ச்சி.

*திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சந்தப்பா ! விருத்தப்பா ! கலிப்பா ! வெண்பா !
தாழிசைப்பா ! கொச்சகப்பா ! தனிப்பாவிற்கும் !
விந்தைப்பாவாகிய கிரந்தப்பாவும் ! வெல்லப்பாவது
போல விகடப்பாவும் ! எந்தப்பா உரைத்திடினும்
ஈடில்லாத இந்த நிதிநிலை அறிக்கைக்கு ஒப்பாகுமோ !

என்று எண்ணத்தக்க வகையிலே தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞர் அவர்களால் 1990-91 ஆம் ஆண்டிற்காக, வழங்கப்பட்டிருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையின் மீது கருத்துத் தெரிவிப்பதிலே நான் பெருமையடைகின்றேன்.